General Sir John Kotelawala Defence University Hospital

பல்கலைக்கழக வைத்தியசாலை
ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்

# பதவி வெற்றிடங்கள்

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக வைத்தியசாலையில் (UHKDU) நிலவும் பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான தராதரமுடைய தொழில் வல்லுநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:

## 1. மருத்துவ வல்லுநர்கள்

- மயக்க மருந்தூட்டு நிபுணர்(இருதய சத்திரசிச்சைசார் ஈடுபாடு விரும்பத்தக்கது)
- எலும்புசார் சிகிச்சை நிபுணர்
- தீவிர சிகிச்சை நிபுணர்
- தோல்சார் சிகிச்சை நிபுணர்
- இதய உடற்கூற்றியல் மின் சிகிச்சை நிபுணர்
- பாலியலால் பரவும் நோயியல் நிபுணர்
- அவசர மருத்துவ நிபுணர்
- சிறுநீரக நோயியல் நிபுணர்
- வஸ்கியூலர் மற்றும் மாற்று சத்திர சிகிச்சை நிபுணர்
- காது, தொண்டை, மூக்கு சிகிச்சை நிபுணர்
- விளையாட்டு மருத்துவ நிபுணர்
- இருதய சத்திரசிகிச்சைநிபுணர்
- வாய், மேலண்ணம்சார் சிகிச்சை நிபுணர்
- குழந்தை இருதய நோயியல் நிபுணர்
- பல் சீரமைப்பு சிகிச்சை நிபுணர்
- சட்ட வைத்திய நிபுணர்
- வடிவமைப்பு சத்திர சிகிச்சை நிபுணர்
- கதிரியக்க சிகிச்சை நிபுணர்

தகைமைகள்:

i. இலங்கை மருத்துவ சபையின் சட்ட இலக்கம் (திருத்தம்) 2018 ஆம் ஆண்டு 28 இன்படி அச்சபையில் பதிவு செய்திருக்கிற அல்லது பதிவு செய்யத்தக்க மருத்துவ உத்தியோகத்தர்களும் பல்வைத்திய நிபுணர்களும்.

அல்லது

ii. இலங்கை மருத்துவ சபையில் (SLMC) இல் செல்லுபடியான முழுமையான பதிவைக் கொண்டிருக்கிற மருத்துவ உத்தியோகத்தர்களும் பல்வைத்திய நிபுணர்களும்.

அத்துடன்

iii. இலங்கை கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பின்படிப்பு நிறுவகத்தின் (PGIM) குறித்த விஸேடத்துவத்துடனான மருத்து கலாநிதி (MD)/ சத்திர சிகிச்சை முதுமாணி (MS). [இலங்கை ஜனநாயக சோ'லிஸ குடியரசின் 11.10.2014 திகதியிடப்பட்ட 1883/17 இலக்க வர்த்தமானியின் (Extraordinary) பின்னிணைப்பு-I]

அத்துடன்

iv. இலங்கை மருத்துவ சபையின் (SLMC) சிறந்த தராதர பத்திரம்

சம்பள அளவுத் திட்டம்
MC 1-2 - Rs.(91,645 - 12 x 2,700 - 124,045)

## 2. மருத்துவ அதிகாரி- தரம் I

தகைமைகள்

i. மருத்துவ அதிகாரியாக கடமையாற்றுவதற்காக இலங்கை மருத்துவ சபையின் (SLMC) செல்லுபடியாகும் முழு பதிவினைக் கொண்டிருக்கும் மருத்துவ அதிகாரிகள்.

அத்துடன்

ii. சுகாதார அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் அல்லது இலங்கை சுகாதார அமைச்சின் தனியார் சுகாதார சேவைகள் இயக்க சபையில் தனியார் வைத்தியசாலைகள், மருத்துவ மனைகள், மகப்பேற்று மனைகள் என்பதன் கீழ் பதிவு செய்யப்பட்ட வைத்தியசாலைகளில் தரம் II மருத்துவ அதிகாரியாக குறைந்தது 06 வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல்

அத்துடன்

iii. இலங்கை ஜனநாயக சோ'லிஸ குடியரசின் 11.10.2014திகதியிடப்பட்ட 1883/17 இலக்க வர்த்தமானியில் (Extraordinary) பின்னிணைப்பு-II இல்குறிப்பிடப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட பின்பட்டப்படிப்பு கல்வித்தகைமை

அத்துடன்

iv. இலங்கை மருத்துவ சபையின் (SLMC) சிறந்த தராதர பத்திரம்

சம்பள அளவுத் திட்டம்
MO 1-1 Rs.(58,675 - 3 x1,375 - 7 x 1,385 - 2 x 1,910 - 10 x 2,270 - 99,015)
* தரம் I மருத்துவ அதிகாரி MO 1-1 Step 14 - Rs.78,585 என்பதில் அமர்த்தப்படுவர்

## 3. பல்வைத்திய நிபுணர்- தரம் I

தகைமைகள்:

i. பல் வைத்தியநிபுணராக கடமையாற்றுவதற்காக இலங்கை மருத்துவ சபையின் (SLMC) செல்லுபடியாகும் முழு பதிவினைக் கொண்டிருக்கும் மருத்துவ அதிகாரிகள்

அத்துடன்

ii. சுகாதார அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் அல்லது இலங்கை சுகாதார அமைச்சின் தனியார் சுகாதார சேவைகள் இயக்க சபையில் தனியார் வைத்தியசாலைகள், மருத்துவ மனைகள், மகப்பேற்று மனைகள்'' என்பதன் கீழ் பதிவு செய்யப்பட்ட வைத்தியசாலைகளில் தரம் II பல் வைத்திய நிபுணராக குறைந்தது 09 வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல்

அத்துடன்

iii. இலங்கை ஜனநாயக சோஷலிஸ குடியரசின் 11.10.2014 திகதியிடப்பட்ட 1883/17 இலக்க வர்த்தமானியில் (Extraordinary) பின்னிணைப்பு-II இல் குறிப்பிடப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட பின்பட்டப்படிப்பு கல்வித்தகைமை

அத்துடன்

iv. இலங்கை மருத்துவ சபையின் (SLMC) சிறந்த தராதர பத்திரம்

சம்பள அளவுத் திட்டம்
MO 1-1 Rs.(58,675 - 3 x1,375 - 7 x 1,385 - 2 x 1,910 - 10 x 2,270 - 99,015)
*தரம் I பல்வைத்திய நிபுணர் MO 1-1 Step 14 - Rs.78,585 என்பதில் அமர்த்தப்படுவர்

## 4. மருத்துவ அதிகாரி- தரம் II

தகைமைகள்

i. மருத்துவ அதிகாரியாக கடமையாற்றுவதற்காக இலங்கை மருத்துவ சபையின் (SLMC) செல்லுபடியாகும் முழு பதிவினைக் கொண்டிருக்கும் மருத்துவ அதிகாரிகள்.

அத்துடன்

ii. சுகாதார அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் அல்லது இலங்கை சுகாதார அமைச்சின் தனியார் சுகாதார சேவைகள் இயக்க சபையில் "தனியார் வைத்தியசாலைகள், மருத்துவ மனைகள், மகப்பேற்று மனைகள்" என்பதன் கீழ் பதிவு செய்யப்பட்ட வைத்தியசாலைகளில்மருத்துவ அதிகாரியாக குறைந்தது 02 வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல

அத்துடன்

iii. இலங்கை மருத்துவ சபையின் (SLMC) சிறந்த தராதர பத்திரம்

சம்பள அளவுத் திட்டம்
MO 1-1 Rs.(58,675 - 3 x1,375 - 7 x 1,385 - 2 x 1,910 - 10 x 2,270 - 99,015)
*தரம் II மருத்துவ அதிகாரி MO 1-1 Step 5 - Rs.64,185 என்பதில் அமர்த்தப்படுவர்

## 5. பல் வைத்திய நிபுணர்- தரம் II

தகைமைகள்:

i. பல் வைத்திய நிபுணராக கடமையாற்றுவதற்காக இலங்கை மருத்துவ சபையின் (SLMC) செல்லுபடியாகும் முழு பதிவினைக் கொண்டிருக்கும் மருத்துவ அதிகாரிகள்.

அத்துடன்

ii. இலங்கை மருத்துவ சபையின் (SLMC) சிறந்த தராதர பத்திரம்

சம்பள அளவுத் திட்டம்
MO 1-1 Rs.(58,675 - 3 x1,375 - 7 x 1,385 - 2 x 1,910 - 10 x 2,270 - 99,015)
*தரம் II பல்வைத்திய நிபுணர் MO 1-1 Step 1 - Rs.58,675 என்பதில் அமர்த்தப்படுவர்

## 6. மருத்துவ அதிகாரி- ஆரம்பநிலை தரம்

தகைமைகள்

i. மருத்துவ அதிகாரியாக கடமையாற்றுவதற்காக இலங்கை மருத்துவ சபையின் (SLMC) செல்லுபடியாகும் முழு பதிவினைக் கொண்டிருக்கும் மருத்துவ அதிகாரிகள்.

அத்துடன்

ii. இலங்கை மருத்துவ சபையின் (SLMC) சிறந்த தராதர பத்திரம்

சம்பள அளவுத் திட்டம்
MO 1-1 Rs.(58,675 - 3 x1,375 - 7 x 1,385 - 2 x 1,910 - 10 x 2,270 - 99,015)
*ஆரம்பநிலை தர வைத்திய அதிகாரி MO 1-1 Step 2 - Rs.60,050 என்பதில் அமர்த்தப்படுவர்

## பொது நிபந்தனைகள்:

i. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்
ii. வழங்கப்படுகின்ற கடமைகளை ஆற்றுவதற்கான உடல், உள ரீதியான திடம் உள்ளவராகவும் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் அல்லது பல்கலைக்கழக நிர்வாகம் பணிக்கின்ற இடங்களில் கடமையாற்றக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்
iii. அதிசிறந்த ஒழுக்க நடத்தை உள்ளவராக இருத்தல் வேண்டும்.
iv. விண்ணப்ப முடிவுத் திகதியன்று அனைத்து தகைமைகளைம் உடையவராக இருத்தல் வேண்டும்
v. மேலுள்ள பதவிகள் நிரந்தரமானது என்பதுடன், பொது சேவையிலுள்ள வைத்திய நிபுணர்கள், வைத்திய அதிகாரி தரம்-I, பல்சிகிச்சை நிபுணர் தரம்-I, வைத்திய அதிகாரி தரம்-II, பல்சிகிச்சை நிபுணர் தரம்-II என்பவர்களுக்கு ஒரு (01) வருட தகைமைகாண் காலத்தைக் கொண்டதும் ஏனயவர்களுக்கு மூன்று (03) வருட தகுதிகாண் காலத்தை உடையதுமாகும்.
vi. வைத்திய நிபுணர்கள் மருத்துவ பீடம் மற்றும் இணைந்த சுகாதார பீட துறைத்தலைவர்கள், பீடாதிபதிகளின் வழிகாட்டுதல் மற்றும் மேற்பார்வையின் கீழ் அப்பீடங்களின் புகுமுக மற்றும் பட்டதாரி மாணவர்களுக்கு கற்பிக்கவும் பயிற்சியளிக்கவும் வேண்டப்படுவர்.
vii. தொழிலாளர் சேமலாப நிதியத்திற்கான (EPF) தொழிலாளியின் பங்களிப்பு 10% ஆகவும் இதற்கான பல்கலைக்ககழகத்தினது பங்களிப்பு 15% ஆகவும் இருக்கும் என்பதுடன் தொழிலாளர் நம்பிக்கை நிதியத்திற்கான (ETF) பங்களிப்பு 3% ஆகவும் இருக்கும். (இது பாராளுமன்றத்தால் கொண்டுவரப்படுகிற சட்டங்களுக்கேற்ப மாற்றத்திற்குட்படக் கூடியது).
viii. ஏற்கனவே அரச சேவையிலிருக்கும் விண்ணப்பதாரிகள் தனமது விண்ணப்பங்களை தமது நிறுவன தலைவரினூடான சமர்ப்பிக்கும்படி அறிவுறுத்தப்படுகிறார்கள்.
ix. ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் பொருத்தமான பரீட்சார்த்திகளை பட்டயலிட்டு தெரிவு செய்ய அதிகாரமுடையது.
x. பொருத்தமாக நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவத்தை பொருத்தமான சான்றிதழ்களின் பிரதிகளையும் இணைத்து பதிவுத் தபாலில் 'நிர்வாகப்பணிப்பாளர், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம், பல்கலைக்கழக வைத்தியசாலை, வேரஹெர" எனும் முகவரிக்கு 30.09.2020 திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடிய வகையில் அனுப்பி வைக்கவும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடவும்.
xi. பூரணப்படுத்தப்படாத அல்லது பிந்திய விண்ணப்பங்கள் மற்றும் கூறப்பட்ட வடிவத்திற்குட்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்
xii. விண்ணப்ப படிவம் மற்றும் ஏனைய தகவல்களை பல்கலைக்கழக இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

www.kdu.ac.lk